தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C. No. 70/2025

29.04.2026

LW : 7 PW : 6

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

**திரு. பன்னீர்செல்வம், த/பெ. குழந்தைவேலு**

**எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி பன்னீர்செல்வத்தை பொருளாதார குற்றப்பிரிவு தலைமை காவலர் A. பிரசன்னா HC No. 631 அடையாளம் காட்டினார்.**

**முதல்விசாரணையின் தொடர்ச்சி**

பணம் செலுத்து சீட்டு வழி வரவு வந்த தொகைகள் துணை தினக்குறிப்பு வரவுக் கணக்கு பேரேட்டில் வரவு வைக்கப்பட்டிருந்தும் கூட ரொக்கப்புத்தகத்தில் குறைவாக வரவு காட்டி கையாடல் செய்யப்பட்டுள்ளது.

30.09.2013 ஆம் தேதியில் வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.12 ல் ரூ.1,94,625/- வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே தேதியில் இந்த தொகையானது வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.47 ல் ரூ.1,39,548/- என குறைவாக வரவு வைக்கப்பட்டு ரூ.55,077/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.12 தேதி 30.09.2013 அ.த.சா.ஆ.65 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.47 ல் ரூ.1,39,548/- என்ற பதிவு அ.த.சா.ஆ.66 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**04.10.2013 ஆம் தேதியில் வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.14 ல் ரூ.2,10,610/- வரவு வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் அதே தேதியில் இந்த தொகையானது வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.48 ல் ரூ.1,35,610/- என குறைவாக வரவு வைக்கப்பட்டு ரூ.75,000/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.14 தேதி 04.10.2013 அ.த.சா.ஆ.67 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.48 ல் ரூ.1,35,610/- என்ற பதிவு அ.த.சா.ஆ.68 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

04.10.2013 ஆம் தேதியில் வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.14 ல் ரூ.68,940/- வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே தேதியில் இந்த தொகையானது வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.48 ல் ரூ.41,940/- என குறைவாக வரவு வைக்கப்பட்டு ரூ.27,000/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.14 தேதி 04.10.2013 அ.த.சா.ஆ.67 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.48 ல் ரூ.41,940/- என்ற பதிவு அ.த.சா.ஆ.69 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

10.10.2013 ஆம் தேதியில் வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.16 ல் ரூ.3,200/- வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே தேதியில் இந்த தொகையானது வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.50 ல் ரூ.2,230/- என குறைவாக வரவு வைக்கப்பட்டு ரூ.970/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.16 தேதி 10.10.2013 அ.த.சா.ஆ.70 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.50 ல் ரூ.2,230/- என்ற பதிவு அ.த.சா.ஆ.71 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

21.10.2013 ஆம் தேதியில் வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.20 ல் ரூ.7,384/- வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே தேதியில் இந்த தொகையானது வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.53 ல் இத்தொகை வரவு வைக்கப்படாமல் ரூ.7,384/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.20 தேதி 21.10.2013 அ.த.சா.ஆ.72 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.53 அ.த.சா.ஆ.73 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

22.10.2013 ஆம் தேதியில் வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.22 ல் ரூ.10,06,396/- வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே தேதியில் இந்த தொகையானது வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.54 ல் ரூ.10,00,000/- என குறைவாக வரவு வைக்கப்பட்டு ரூ.6,396/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.22 தேதி 22.10.2013 அ.த.சா.ஆ.74 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.54 ல் ரூ.10,00,000/- என்ற பதிவு அ.த.சா.ஆ.75 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

23.10.2013 ஆம் தேதியில் வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.23 ல் ரூ.3,70,275/- வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே தேதியில் இந்த தொகையானது வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.55 ல் ரூ.3,68,000/- என குறைவாக வரவு வைக்கப்பட்டு ரூ.2,275/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.23 தேதி 23.10.2013 அ.த.சா.ஆ.76 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம்**

**பக்கம் எண்.55 ல் ரூ.3,68,000/- என்ற பதிவு அ.த.சா.ஆ.77 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

25.10.2013 ஆம் தேதியில் வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.24 ல் ரூ.3,222/- வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே தேதியில் இந்த தொகையானது வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.56 ல் வரவு வைக்கப்படாமல் ரூ.3,222/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.24 தேதி 25.10.2013 அ.த.சா.ஆ.78 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.56 அ.த.சா.ஆ.79 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

11.11.2013 ஆம் தேதியில் வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.32 ல் ரூ.29,100/- வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே தேதியில் இந்த தொகையானது வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.65 ல் ரூ.28,100/- என குறைவாக வரவு வைக்கப்பட்டு ரூ.1,000/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.32 தேதி 11.11.2013 அ.த.சா.ஆ.80 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.65 ல் ரூ.28,100/- என்ற பதிவு அ.த.சா.ஆ.81 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**18.11**.2013 ஆம் தேதியில் வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.34 ல் ரூ.91,782/- வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே தேதியில் இந்த தொகையானது வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.67 ல் ரூ.52,782/- என குறைவாக வரவு வைக்கப்பட்டு ரூ.39,000/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.34 தேதி 18.11.2013 அ.த.சா.ஆ.82**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.67 ல் ரூ.52,782/- என்ற பதிவு அ.த.சா.ஆ.83 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**18.11.**2013 ஆம் தேதியில் வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.34 ல் ரூ.25,838/- வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே தேதியில் இந்த தொகையானது வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.67 ல் ரூ.16,248/- என குறைவாக வரவு வைக்கப்பட்டு ரூ.9,590/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.34 தேதி 18.11.2013 அ.த.சா.ஆ.82 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.67 ல் ரூ.16,248/- என்ற பதிவு அ.த.சா.ஆ.84 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**30.11.**2013 ஆம் தேதியில் வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.36 ல் ரூ.450/- வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே தேதியில் இந்த தொகையானது வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.72 ல் ரூ.400/- என குறைவாக வரவு வைக்கப்பட்டு ரூ.50/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.36 தேதி 30.11.2013 அ.த.சா.ஆ.85 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.72 ல் ரூ.400/- என்ற பதிவு அ.த.சா.ஆ.86 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

13.12.2013 ஆம் தேதியில் வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.41 ல் ரூ.1,420 மற்றும் நகை மதிப்பீட்டாளர் கட்டணம் 200 /- ஆக ரூ.1,620/- வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே தேதியில் இந்த தொகையானது வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.79 ல் ரூ.1,570/- என குறைவாக வரவு வைக்கப்பட்டு ரூ.50/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு**

**பேரேடு பக்கம் எண்.41 தேதி 13.12.2013 அ.த.சா.ஆ.87 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.79 ல் ரூ.1,570/- என்ற பதிவு அ.த.சா.ஆ.88 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

14.12.2013 ஆம் தேதியில் வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.44 ல் ரூ.3,885/- வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே தேதியில் இந்த தொகையானது வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.80 ல் ரூ.3,285/- என குறைவாக வரவு வைக்கப்பட்டு ரூ.600/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.44 தேதி 14.12.2013 அ.த.சா.ஆ.89 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.80 ல் ரூ.3,285/- என்ற பதிவு அ.த.சா.ஆ.90 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**15.12**.2013 ஆம் தேதியில் வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.50 ல் ரூ.78,145/- வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே தேதியில் இந்த தொகையானது வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.81 ல் ரூ.77,895/- என குறைவாக வரவு வைக்கப்பட்டு ரூ.250/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.50 தேதி 15.12.2013 அ.த.சா.ஆ.91 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.81 ல் ரூ.77,895/- என்ற பதிவு அ.த.சா.ஆ.92 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

19.02.2014 ஆம் தேதியில் வரிசை எண்.18 துணை தினக்குறிப்பு வரவு கணக்கு பேரேடு பக்கம் எண்.8 ல் ரூ.6,104/- வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே தேதியில் இந்த தொகையானது வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.108 ல் ரூ.5,984/- என குறைவாக வரவு வைக்கப்பட்டு ரூ.120/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.17 துணை தினக்குறிப்பு வரவு**

**கணக்கு பேரேடு பக்கம் எண்.8 தேதி 19.02.2014 அ.த.சா.ஆ.93 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.108 ல் ரூ.5,984/- என்ற பதிவு அ.த.சா.ஆ.94 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

இவ்வினத்தில் ஆக கூடுதல் ரூ.2,27,984/- கையாடல் செய்யப்பட்டுள்ளது. சட்டப்பிரிவு 84 ன் படி முறையாக கணக்கு எழுதுவதை உறுதி செய்துவரவேண்டியது எதிரி 1 தினகரனின் தலையாய கடமையாகும். இதனையே வலியுறுத்தி சங்க தனி அலுவலர் 05.08.2011 ல் நிர்ணயித்துக் கொடுத்துள்ள கடமைகளும் பொறுப்புகளையும் பற்றிய ஆணைய இவர் 05.08.2011 ல் பெற்றுள்ளார் என்பதுடன் அந்த ஆணையில் சங்க எழுத்தர் வி.குமார் என்பவருக்கு துணை தினக்குறிப்பு பற்று மற்றும் வரவு பேரேடுகளையும் மற்றும் ரொக்கப்புத்தகத்தையும் எழுதி வரவேண்டும் என திட்டவட்டமாக இந்த ஆணையில் குறிப்பிட்டுள்ளதை எதிரி 3 வி.குமார் செயல்படுத்த தவறியுள்ளார்.

இதுகுறித்து எதிரி 1 தினகரனை விசாரித்தபோது அவர் தனது வாக்குமூலம் 07.07.2015 ல் பக்கம் எண்.3 ல் வி.குமார் வரவு செலவுப் பதிவேடுகளை எழுதவில்லை ஏனெனில் தான் சொன்ன வேலைகளை அவர் செய்ய முன்வரவில்லை எனவும், துணைதினக்குறிப்பு பேரேடுகளை தினப்பேரேடு (ரொக்கப்புத்தகம்) ஆகியவற்றை எழுதவில்லை என்பது குறித்து எழுத்தர் வி.குமார் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்பதை தனது வாக்குமூலம் பக்கம் எண்.4 ல் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், சங்கத்தில் பணியாற்றும் இதர இரண்டு எழுத்தர்களும் தனது கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருவார்கள் என்பதும் அவர்களது பணிகளை கண்காணித்து வருவதும் தனது பொறுப்பு என்பது தனக்கு தெரியும் என பக்கம் எண்.2 ல் ஒப்புக்கொண்டுள்ள இவர் எழுத்தர் வி.குமார் தனி அலுவலரின் ஆணையை

செயல்படுத்த மறுத்திருப்பாரேயானால், அது குறித்து சங்க தலைவருக்கு குறிப்பு எழுதி அனுப்பி இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க எழுத்துமூலமாக பரிந்துரை செய்து சங்க தலைவரின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்க இவர் ஏற்பாடு செய்திருக்கவேண்டும்.

ஆனால் அவ்வாறு எதிரி தினகரன் செயல்பட தவறியுள்ளார் என்பதையும் தனது 07.07.2015 ந் தேதிய வாக்குமூலத்தில் பக்கம் எண்.8 ல் தனக்கு வேண்டிய நபரைக் கொண்டு துணைதினக்குறிப்பு பேரேடு வரவு கணக்கு மற்றும் பற்றுப்பேரேடு கணக்குகளையும் எழுதச் செய்துள்ளேன் எனவும், அதனால் தான் எவர் ஒருவரும் அதில் கையொப்பம் இடவில்லை என்பதும், தானும் அதில் கையொப்பம் இடவில்லை எனவும், பக்கம் எண்.9 ல் ஒப்புக்கொண்டுள்ளார்.

ஆனால் துணை தினக்குறிப்பு பேரேடு வரவு மற்றும் பற்று பேரேட்டில் செய்யப்பட்டுள்ள பதிவுகளின் அடிப்படையில் ரொக்கப்புத்தகத்தை எழுதி முடித்து எதிரி 1 தினகரன் கையொப்பமிட்டுள்ளார். இவற்றால், இவர் சங்கத்தின் ரொக்கப்புத்தகத்தின் வரவுசெலவுகளை தனி அலுவலர் ஆணைப்படி கூட்டுப்பொறுப்பாக செயல்படுத்தாமல், இவர் இவரது தனி பொறுப்பாக செயல்படுத்தி வந்துள்ளார். இது தொடர்பாக எதிரி 1 தினகரனை விசாரித்ததில் அவர் தனது வாக்குமூலம் நாள் 07.07.2015 ல் பக்கம் எண்.47 மற்றும் 48 ல் மேலே குறிப்பிட்டுள்ள தொகை ரூ.2,27,984/- ஐ கையாடல் செய்துள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளார். இவற்றால் எதிரி 1 என். தினகரன் இவ்வினத்தில் ரூ.2,27,984/- ஐ கையாடல் செய்துள்ளார்.

பற்றுச்சீட்டு இல்லாமல் துணை தினக்குறிப்பு பற்றுக்கணக்கு பேரேடு மற்றும் ரொக்கப்புத்தகத்தில் பற்று எழுதி கையாடல் செய்யப்பட்டுள்ளது.

25.05.2013 ந் தேதியில் வரிசை எண்.15 துணை தினக்குறிப்பு பற்று கணக்கு பேரேடு பக்கம் எண்.3 மற்றும் வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.13 ல் ரூ.200/- ஐ பற்று எழுதப்பட்டு கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.15 துணை தினக்குறிப்பு கணக்கு பேரேடு பக்கம் எண்.3 தேதி 25.05.2013 அ.த.சா.ஆ.95 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.13 ல் ரூ.200/- என்ற பதிவு அ.த.சா.ஆ.96 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

14.06.2013 ந் தேதியில் வரிசை எண்.15 துணை தினக்குறிப்பு பற்று கணக்கு பேரேடு பக்கம் எண்.4 மற்றும் வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.17 ல் ரூ.43/- ஐ பற்று எழுதப்பட்டு கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.15 துணை தினக்குறிப்பு கணக்கு பேரேடு பக்கம் எண்.4 தேதி 14.06.2013 அ.த.சா.ஆ.97 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.17 ல் ரூ.43/- என்ற பதிவு அ.த.சா.ஆ.98 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**13.12**.2013 ந் தேதியில் வரிசை எண்.15 துணை தினக்குறிப்பு பற்று கணக்கு பேரேடு பக்கம் எண்.43 மற்றும் வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.79 ல் ரூ.1,00,000/- ஐ பற்று எழுதப்பட்டு கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.15 துணை தினக்குறிப்பு கணக்கு பேரேடு பக்கம் எண்.43 தேதி 13.12.2013 அ.த.சா.ஆ.99 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.79 ல் ரூ.1,00,000/- என்ற பதிவு அ.த.சா.ஆ.100 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**18.12**.2013 ந் தேதியில் வரிசை எண்.15 துணை தினக்குறிப்பு பற்று கணக்கு பேரேடு பக்கம் எண்.43 மற்றும் வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.83 ல் ரூ.6,750/- ஐ பற்று எழுதப்பட்டு கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.15**

**துணை தினக்குறிப்பு கணக்கு பேரேடு பக்கம் எண்.43 தேதி 18.12.2013 அ.த.சா.ஆ.99 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.83 ல் ரூ.6,750/- என்ற பதிவு அ.த.சா.ஆ.101 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

19.12.2013 ந் தேதியில் வரிசை எண்.15 துணை தினக்குறிப்பு பற்று கணக்கு பேரேடு பக்கம் எண்.43 மற்றும் வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.84 ல் ரூ.1,800/- ஐ பற்று எழுதப்பட்டு கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.15 துணை தினக்குறிப்பு கணக்கு பேரேடு பக்கம் எண்.43 தேதி 19.12.2013 அ.த.சா.ஆ.99 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.84 ல் ரூ. 1,800/- என்ற பதிவு அ.த.சா.ஆ.102 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

23.12.2013 ந் தேதியில் வரிசை எண்.15 துணை தினக்குறிப்பு பற்று கணக்கு பேரேடு பக்கம் எண்.44 ல் ரூ.1,00,000/- த்திற்கான பதிவு இல்லை. ஆனால் வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.86 ல் துணை தினக்குறிப்பு படி (Members SB Account) என ரூ.1,00,000/- ஐ பற்று எழுதப்பட்டு கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.15 துணை தினக்குறிப்பு கணக்கு பேரேடு பக்கம் எண்.44 தேதி 23.12.2013 அ.த.சா.ஆ.103 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.86 ல் ரூ.1,00,000/- என்ற பதிவு அ.த.சா.ஆ.104 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

ஆக கூடுதல் ரூ.2,08,793/- இவ்வினத்தில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. சட்டப்பிரிவு 84 ன் படி முறையாக கணக்கு எழுதுவதை உறுதி செய்துவரவேண்டியது எதிரி 1 தினகரனின் தலையாய கடமையாகும். இதனையே வலியுறுத்தி சங்க தனி அலுவலர் 05.08.2011 ல் நிர்ணயித்துக் கொடுத்துள்ள கடமைகளும் பொறுப்புகளையும் பற்றிய ஆணைய இவர்

05.08.2011 ல் பெற்றுள்ளார் என்பதுடன் அந்த ஆணையில் சங்க எழுத்தர் வி.குமார் என்பவருக்கு துணை தினக்குறிப்பு பற்று மற்றும் வரவு பேரேடுகளையும் மற்றும் ரொக்கப்புத்தகத்தையும் எழுதி வரவேண்டும் என திட்டவட்டமாக இந்த ஆணையில் குறிப்பிட்டுள்ளதை எதிரி 3 வி.குமார் செயல்படுத்த தவறியுள்ளார்.

இதுகுறித்து எதிரி 1 தினகரனை விசாரித்தபோது அவர் தனது வாக்குமூலம் 07.07.2015 ல் பக்கம் எண்.3 ல் வி.குமார் வரவு செலவுப் பதிவேடுகளை எழுதவில்லை ஏனெனில் தான் சொன்ன வேலைகளை அவர் செய்ய முன்வரவில்லை எனவும், துணைதினக்குறிப்பு பேரேடுகளை தினப்பேரேடு (ரொக்கப்புத்தகம்) ஆகியவற்றை எழுதவில்லை என்பது குறித்து எழுத்தர் வி.குமார் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்பதை தனது வாக்குமூலம் பக்கம் எண்.4 ல் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், சங்கத்தில் பணியாற்றும் இதர இரண்டு எழுத்தர்களும் தனது கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருவார்கள் என்பதும் அவர்களது பணிகளை கண்காணித்து வருவதும் தனது பொறுப்பு என்பது தனக்கு தெரியும் என பக்கம் எண்.2 ல் ஒப்புக்கொண்டுள்ள இவர் எழுத்தர் வி.குமார் தனி அலுவலரின் ஆணையை செயல்படுத்த மறுத்திருப்பாரேயானால், அது குறித்து சங்க தலைவருக்கு குறிப்பு எழுதி அனுப்பி இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க எழுத்துமூலமாக பரிந்துரை செய்து சங்க தலைவரின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்க இவர் ஏற்பாடு செய்திருக்கவேண்டும்.

ஆனால் அவ்வாறு எதிரி தினகரன் செயல்பட தவறியுள்ளார் என்பதையும் தனது 07.07.2015 ந் தேதிய வாக்குமூலத்தில் பக்கம் எண்.8 ல் தனக்கு வேண்டிய நபரைக் கொண்டு துணைதினக்குறிப்பு பேரேடு வரவு கணக்கு மற்றும் பற்றுப்பேரேடு கணக்குகளையும் எழுதச் செய்துள்ளேன் எனவும், அதனால்

தான் எவர் ஒருவரும் அதில் கையொப்பம் இடவில்லை என்பதும், தானும் அதில் கையொப்பம் இடவில்லை எனவும், பக்கம் எண்.9 ல் ஒப்புக்கொண்டுள்ளார்.

ஆனால் துணை தினக்குறிப்பு பேரேடு வரவு மற்றும் பற்று பேரேட்டில் செய்யப்பட்டுள்ள பதிவுகளின் அடிப்படையில் ரொக்கப்புத்தகத்தை எழுதி முடித்து எதிரி 1 தினகரன் கையொப்பமிட்டுள்ளார். இவற்றால், இவர் சங்கத்தின் ரொக்கப்புத்தகத்தின் வரவுசெலவுகளை தனி அலுவலர் ஆணைப்படி கூட்டுப்பொறுப்பாக செயல்படுத்தாமல், இவர் இவரது தனி பொறுப்பாக செயல்படுத்தி வந்துள்ளார். இது தொடர்பாக எதிரி 1 தினகரனை விசாரித்ததில் அவர் தனது வாக்குமூலம் நாள் 07.07.2015 ல் பக்கம் எண்.49 ல் தான் இத்தொகை ரூ.2,08,793/- ஐ பொய் கணக்கு எழுதி சங்க நிதியில் கையாடல் செய்துள்ளார் என ஒப்புக்கொண்டுள்ளார். இவற்றால் எதிரி 1 என். தினகரன் இவ்வினத்தில் ரூ.2,08,793/- ஐ கையாடல் செய்துள்ளார்.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.29 07:45:38 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்